லஞ்ச ஊழல்: 5 மாதத்தில் 71 பேர் பிடிபட்டனர்!

விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka

# ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ் 166

யாழ்ப்பாணம் வைகாசி 16 ஜ. அவ். 7 வியாழக்கிழமை 30-5-74

கொழும்பு, புதன்

கடந்த 5 மாதங்களில் லஞ்சம்வாங்கிய குற்றச்சாட்டின் மீது 71 பேர் பிடிபட்டிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு 179 பேர் லஞ்சக் குற்றச்சாட்டின்மீது கைது செய்யப்பட்டனர். இந்தமாதம் மாத்திரம் 16 பேர் பிடிபட்டுள்ளனர்.

இதில் மூன்று நபர்கள் பொதுமக்கள் புகார்களின்மீது கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சிலாபம் மாவட்டத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் அவரது மகன் ஆகியோர் லஞ்சக் குற்றச்சாட்டின் மீது கைது செய்யப்பட்டனர். அதே மாவட்டத்தில் மேலும் ஒரு பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். இவர்கள் 50 ரூபாய் லஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இ. போ. ச. கண்டக்டர் ஒருவர், கிராமசேவகர் ஒருவர், ரயில்வே பொலிஸ் ஒருவர் ஆகியவர்களும் லஞ்சக் குற்றச்சாட்டின்மீது கைதானவர்களில் உள்ளனர்.

லஞ்சத் தடுப்பு ஆணையாளர் திணைக்களம் இவர்கள்மீது நடவடிக்கை எடுத்துவருகின்றது.

# உள்ளூராட்சிமன்ற சேவை நிர்வாகத்தில் மாறுதல்கள்

யாழ்ப்பாணம், வியா.

உள்ளூராட்சிமன்ற நிர்வாகத்திலும், தேர்தல் முறையிலும் சில மாற்றங்கள் கொண்டுவருவதற்கான ஒழுங்குகளை செய்யும்வகையில உள்ளூராட்சி மன்ற தலைவர்களின் ஆலோசனைகளும் அபிப்பிராயங்களும் அறியப்பட்டு வருகிறது.

வடபகுதி உள்ளூராட்சி மன்ற தலைவர்களின் ஆலோ

## வடபகுதி மன்றத் தலைவர்களிடமும் ஆலோசனை

சனைகளை அறியும்வகையில் அடுத்தமாதம் யாழ்ப்பாணத்தில் மகாநாடொன்று நடைபெறுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றதலைவர்களின் மகாநாடு அடுத்தமாதம் 5-ம், 6-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெறும்.

இம் மகாநாட்டில் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ஈ. வி. டி. அல்விஸ் கலந்து கொள்வார். உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகளும், இம் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

இம்மகாநாட்டில், உள்ளூராட்சிமன்ற அதிகாரங்கள், கடமைகள், சேவைகள்பற்றி விளக்கவுரைகள் இடம்பெறுமெனத் தெரியவருகிறது.

மகாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சியை காலை 9 மணிக்கு அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா ஆரம்பித்து வைப்பார்.

அன்றையதினம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டி. டால்போத், திரு. ஜி. தயானந், த. டி. சில்வா, திரு. எஸ். சண்முகலிங்கம், திரு. கே. ஜெயசிங்கா, திரு. பி. எம். யோசேப் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

மகாநாட்டின் இரண்டாம் நாளன்று யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசேப், திரு. வி. சத்தியானந்தன், திரு. ஜே. ஈ. வர்ணகுலசிங்கம், டாக்டர் அருளம்பலம், திரு. எஸ். ஜே. அருணாசலம், திரு. சி குமாரசிங்கம், திரு. அ நல்லைநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

(புங். நிரு.)

## தென்னம் பத நீரிலிருந்து சர்க்கரை!

### வடமராட்சியில் மற்றொரு உற்பத்தி

பருத்தித்துறை, புதன்

''தென்னை மரத்திலிருந்து பெறப்படும் பதநீரிலிருந்து சர்க்கரை செய்வதற்கானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இவ்வேலைகளை, கா்ப்பநீரிலிருந்து சீனியை உற்பத்தி செய்யும் பருத்தித்துறை பகுதியிலுள்ள கொத்தியாவத்தை பனங்கட்டித் தொழிற்சாலையே மேற்கொள்ளவுள்ளது.''

இத்தகவலை வடமராட்சி தெற்கு மேற்கு காரியாதிகாரி திரு. கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார். கொத்தியாவத்தைபனங்கட்டி தொழிற்சாலை, கருப்பஞ்சீனியை உற்பத்தி செய்து முதல் ரூபா 3.85 சதத்துக்கு விற்பனை செய்தது குறிப்பிடத்தக்கது.

திரு. மாணிக்கவாசகர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், மக்கள் மனம் வைத்தால்தான் சர்க்கரை உற்பத்திவேலைகள்சீராக இயங்குமென்றும், தென்னை மரத்திலிருந்து பதநீரை இறக்குவதற்கு, சீவல்தொழிலாளிகளுக்கு மக்கள் மரங்களை வழங்கவேண்டுமென்றும்கூறினார். சர்க்கரை, தனிப்பட்ட வியாபார ஸ்தாபனங்களிலும் கூட்டுறவுக் கடைகளிலும் ரூத்தல் ஆறுரூபாவுக்கு விற்கப்படும் இன்றைய வேளையில், தென்னஞ் சர்க்கரையை உற்பத்திசெய்து குறைந்த விலையில் விற்பது மக்களுக்கு கூடிய நன்மையை அளிக்குமென்றும் அவர் கூறினார்.

கொத்தியாவத்தை பனங்கட்டித்தொழிற்சாலை புலோலி அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்குவது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டுச் சம்பவங்கள்

## கருணாநிதிக்கு கேரள முதல்வர் கடிதம்

சென்னை, மே 29

தமிழ்நாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மலையாளிகளுக்குச் சொந்தமான கடைகள் மீது தமிழர் பாதுகாப்பு படையினர் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவம் சில பத்திரிகைகளில் மிகைப்படுத்திக்கூறப்பட்டுள்ளன என்று தமிழ்நாடு முதல்வர் திரு. மு. கருணாநிதி இன்று பத்திரிகைநிருபர்களிடம் கூறினார்.

இந்தக் கல்லெறிச் சம்பவங்களை தமிழருக்கும் மலையாளிகளுக்குமிடையிலான சண்டையைப்போல் சிலர் பெரிதுப்படுத்தப் பார்க்கிறார்கள் என்றார் திரு. கருணாநிதி

தமிழ்நாட்டில் வன்முறைகள் சிறியஅளவில் ஏற்பட்டாலும் சகித்துக்கொள்ளப் போவதில்லை. அவைகள்ஒடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

கடந்த ஞாயிறன்று தமிழ்நாட்டில் நடந்த சம்பவங்கள் பற்றி கவலை தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கும்படியும் கோரி கேரள முதல்வர் திரு. அச்சுதமேனன் தமக்கு கடிதம் எழுதியிருப்பதாக திரு. கருணாநிதி தெரிவித்தார்.

இச்சம்பவம்குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக 40 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலை திரு. அச்சுதமேனனுக்குத் தெரிவித்திருப்பதாக அவர் சொன்னார். திருவனந்தபுரத்திலும் தமிழர்களின் கடைகள் தாக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்துள்ளது. இதுபற்றியும் நடவடிக்கை எடுக்கும்படி திரு. அச்சுதமேனனிடம் கேட்டிருப்பதாக அவர் சொன்னார். மாநிலங்களில் வாழும் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது மாநில அரசுகளின் கடமை என்று அவர் சொன்னார்.

## மத்திய மந்திரிகளுக்கு கறுப்புக் கொடி இல்லை

சென்னை, மே 29

தமிழ்நாட்டுக்குவரும் மத்திய மந்திரிகளுக்கு கறுப்புக் கொடி காட்டுவதை திராவிட கழகத்தினர் கைவிட வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வரும் தி. மு. கழகத் தலைவருமான திரு. மு. கருணாநிதி விடுத்த கோரிக்கையை தி. கழகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

அமைச்சர்களை சந்தித்து குறைகளைக்கூற வாய்ப்பிருப்பதால் கறுப்புக்கொடி காட்டுவதைக் கைவிடவும் என்று திரு. கருணாநிதி கூறியிருந்தார்.

## 18 வயதுப் பெண்ணுக்கு கருச்சிதைவு? டாக்டர் கைது!

யாழ்ப்பாணம், வியாழன்

கருச்சிதைவு செய்யப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும், 18 வயதான இளம் பெண் 3 தினங்கள் மயக்கமுற்ற நிலையிலிருந்து பின் நேற்று முன்தினமிரவு மரணமானார்.

கொக்குவிலைச் சேர்ந்த நாகராணி என்ற இப்பெண் இம் மாதம் 26-ம் தேதி மயக்கமுற்ற நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நிலைமை ஆபத்தாக இருந்ததாலும் கருச்சிதைவு செய்யப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டதாலும், பொலிஸாருக்குத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் ஜே. எல். செல்வராசா, சப் இன்ஸ்பெக்டர் சாத்சார் ஜன்ட் ஜேன்ஸ், ஆகியோர் உடனடியாக இச்சம்பவம் பற்றிய விசாரணையில் ஈடுபட்டனர்.

பொலிஸார் ஆஸ்பத்திரிக்கு விரைந்து சென்ற போது அப்பெண் மயக்கமடைந்த நிலையில் இருக்கக்காணப்பட்டார்.

இது சம்பந்தமாக [illegible] யடியில் சிகிச்சை [illegible] மொன்றைநடாத்தும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுதேச வைத்தியர் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

மரணவிசாரணை நடத்திய திரு. எஸ். அமிர்தலிங்கம் ஜே. பி. யூ. எம். மேல் விசாரணையை இம்மாதம் [illegible] நார். (ஆனை. நி-ச)

## இலங்கையிடமிருந்து பாக். தேயிலை கொள்வனவு செய்யும்

கொழும்பு, புதன்

இலங்கையிடமிருந்து தேயிலை கொள்வனவு செய்யும் நாடுகளில் பாகிஸ்தான் முக்கிய இடம் வகிக்கும்.

இந்தத் தகவலை பாகிஸ்தானுக்குச் சென்று வந்த இலங்கை வர்த்தக தூதுக்குழுவின் தலைவரும் வர்த்தக அமைச்சின் செயலாளருமான திரு. ஜெயந்தா ஹெல்கமா தெரிவித்தார்.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் பாகிஸ்தான் இலங்கையிடமிருந்து தேயிலை கொள்வனவு செய்யும் நாடுகளில் பாகிஸ்தான் முக்கிய இடத்தை வகிக்க உள்ளதாக அவர் சொன்னார்.

பாகிஸ்தான் அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தை வெற்றியை அளித்ததாகவும் அவர் கூறினார்.

வெற்றிலையை பாகிஸ்தானுக்கு இலங்கை ஏற்றுமதி செய்து வருவதாகவும் இந்தப் புதிய ஏற்றுமதியினால் வெளிநாட்டுச் செலவணி கிடைப்பதாகவும் திரு. ஹெல்கமா

4-ம் பக்கம் பார்க்க

## சோவியத் மா கப்பல்

திருகோணமலை, புதன்

8800 தொன் மாவை ஏற்றிக்கொண்டு சோவியத் கப்பல் ஒன்று திருமலை துறைமுகம் வந்துள்ளது. சோவியத் யூனியனுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழ் இந்த இரண்டாவது தொகை மா இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யூறியா - அமோனியா, சல்பேற் மற்றும் விவசாய மருந்துகள் மொத்த விலைக்கும், சில்லறைக்கும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். யாம்கோ., 138, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 200

## கல்வி

நவீன கணிதம், (தமிழில்) 6-ம் 7-ம், 8-ம், தேசிய கல்வித் தராதர வகுப்புகளுக்கும், பயிற்சிக் கலாசாலை ஆசிரியருக்கும் தபால்மூலம் போதனை மொடேர்ண் எடியூகேஷன் சென்ரர், நெல்லியடி, கரவெட்டி. 132

இலங்கை சித்த ஆயுர்வேத கல்லூரியில் சேர்வதற்கான பாடத்திட்டத்தை ரூபா 5/-க்கு தபாற்கட்டளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். பதிவாளர், ஆயுர்வேத கல்லூரி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 174

## தேவை

தென்னந்தோட்டம் குத்தகைக்குத் தேவை. என்ன நிலை என்றாலும், காரில் பிரயாணம் செய்வதற்கு வசதியாக இருத்தல் நன்று. சாவகச்சேரி, ஆனையிறவுப்பகுதி. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 209, மே/பா. 'ஈழநாடு' த. பெட்டி 49, யாழ்ப்பாணம் 209

50 தொடக்கம் 250 பரப்பு கல்லுப்பூமி தேவை. பலாலி வீதிக்கு அண்மையில் விரும்பத்தக்கது. விலையும் இடக்குறிப்பும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 208, மே/பா 'ஈழநாடு' த. பெட்டி 49, யாழ்ப்பாணம். 208

## பயிற்சி

மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா வகுப்புக்கள் (மாலை) ஆரம்பமாகியுள்ளது. உடன் தொடர்பு கொள்க. அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒ(F)வ் எஞ்ஜினியரிங் ரெக்னேலொஜி, 11/B, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 211

விவாகம்-உங்கள் மகனுக்கு பெண் வேண்டுமா அல்லது உங்கள் மகளுக்குத் தகுந்த வரன் வேண்டுமா? முழு விபரங்களுடன் எம்மை ஆலோசியுங்கள். கற்பகதரு, 136, பிரதான வீதி, யாழ்ப்பாணம் 203

## விற்பனைக்கு

மாணவ மாணவிகளுக்கு அடையாள அட்டைப் படங்கள் அரைச்சலாரில் 1-6-74 தொடக்கம் செய்து கொடுக்கப்படும். உரிமையாளர் M. நடராஜா, ஸ்ருடியோ பிறின்செஸ் சுன்னாகம். 212

## காணவில்லை

T 0323950, T 0323951, T 0323953, T 0323954, R 416626, R 831218, R 416627, TC 081813 இலக்கமுடைய கூப்பன் புத்தகங்களைக் காணவில்லை, கண்டெடுப்பவர்கள் ஈழநாடு காரியாலத்தில் ஒப்படைக்கவும். 213

## 54-வது ஆண்டுவிழா

கல்வியங்காடு, புதன்

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 54-வது ஆண்டு நிறைவுவிழா கலாநிதி நல்லைநாதன் தலைமையில் நடைபெற்றது. சங்க மண்டபத்தில் நடைபெற்றஇவ்விழாவுக்கு பிரதமவிருந்தினராக திரு. பூவிலிங்கம் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இவ்விழாவின் காலை நிகழ்ச்சியாக சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நடைபெற்றன. மாலை நிகழ்ச்சியின் போது திருவாளர்கள் க. திருரவீந்திரன். நடனசிகாமணி, மகேந்திரன் ஆகியோர் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ)

## கௌண்டா விஜயம் ஒத்திவைப்பு

கொழும்பு, புதன்

ஸாம்பியா அதிபர் டாக்டர் கெனத் கௌண்டாவின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவர் ஜூன் மாத முதல் வாரத்தில் இங்கு விஜயம் செய்யவிருந்தார்.

ஆ. வ. சதாசிவம்
சட்டத்தரணி
காங்கேசந்துறை

### 1973-ம் ஆண்டின் 44-ம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 283-ம் பிரிவின்கீழ்மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்குவதற்கான இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்கநம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

காங்கேசந்துறை பலாலி காலஞ்சென்ற இளையதம்பி சிதம்பரப்பிள்ளையின் மரணசாதனமெழுதா ஆதனத்துக்கும் மற்றும் பெறுமதிகளுக்கும் சம்பந்தப்பட்டவை.

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றம்
இல: 3014 T

காங்கேசந்துறை பலாலி சிதம்பரப்பிள்ளை தம்பையா

எதிராக

விண்ணப்பகாரன்

1. காங்கேசந்துறை பலாலி சிதம்பரப்பிள்ளை இளையதம்பி தனது கடமைகளைப் பார்க்க ஏலாதவர் 2-ம் பிரதிவாதியை தனது பாதுகாவலராகக் கொண்டு வெளிப்படுகிறார்.

2. காங்கேசந்துறை பலாலி சிதம்பரப்பிள்ளை செல்லையா. இவர் 1-ம் பிரதிவாதியின் பாதுகாவலராக வெளிப்படுகிறார்.

பிரதிவாதிகள்

1973-ம்ஆண்டு கார்த்திகை மாதம் 30-ந் திகதி நீதிநிருவாகச்சட்டத்தின் 281-ம் பிரிவின்கீழ் மனுச்செய்யப்பட்ட விண்ணப்பத்தில் சொல்லப்பட்ட முக்கியமான உறுதி வசனங்கள்யாவும் பார்த்தமாத்திரத்திலேயே நிரூபிக்கப்பட்டுள்ளதென்த திருப்தியடைந்ததின் பேரில் மேலதிக பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளராகிய எம். ஏ. எல். எல்லபொல ஆகிய நான் கட்டளையிடுகிறதாவது:

இக்கட்டளையின் அறிவித்தலைப்பெற்ற எவராவது அல்லது இந்நடவடிக்கைகளில் அக்கறையுள்ள எவராவது 1974ம் ஆண்டு வைகாசிமாதம் 27-ந் திகதி அல்லது அதற்குமுன் காரணம்காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி

அ. மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச்சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் பெறுமதிகளுக்கும் நிருவாகத் தத்துவப் பத்திரம் பெறுவதற்கு மேற்சொல்லப்பட்ட விண்ணப்பகாரரே மேற்சொல்லப்பட்ட வழிஉருத்தாளர் என்ற வகையில் உரித்துடையவர் என்றும் அவ்வண்ணமே வழங்கப்படுமென்றும் கட்டளையிடுகிறேன்.

(ஆ) இம்மரணசாதனமெழுதாதசொத்து நடவடிக்கை சார்பாக 1-ம் பிரதிவாதியின் நலத்தைப் பாதுகாக்க 2-ம் பிரதிவாதியைப் பாதுகாவலராக நியமிக்கப்படுவாரென்றும் கட்டளையிடுகிறேன்.

1974-ம் ஆண்டு
சித்திரைமாதம் 10 ம் திகதி.

சோ. இராசநாதன் (ஒப்பம்)
மேலதிக நம்பிக்கைப்
பொறுப்பாளருக்காக.

27-5-74 காரணம் காட்டுவதற்கான திகதி 26-6-74 வரை நீடிக்கப்படுகிறது.

சோ. இராசநாதன் (ஒப்பம்)
மேலதிக நம்பிக்கைப்
பொறுப்பாளருக்காக
25

## அறிவித்தல்

அரிசி ஆலைக்குத்தேவைப்படும் திறமான ரப்பர் ஹல்லர் ரோலர்கள் ஒரு குறிப்பிட்ட தொகை எம்மிடம் கைவசம் உள்ளன.

கிடைக்குமிடம்:

278, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆஸ்பத்திரிக்கு முன்பாக இருக்கும் ரயர்க்கடை) 28

## திருமண அழைப்பு

சந்திரசிங்கம் — சுலோசனதேவி

2 6 74 ஞாயிறு நண்பகல் 11 மணிக்கும் 2 மணிக்குமிடையிலுள்ள சுபவேளையில்,

எமது

சிரேஷ்ட புத்திரன்
சந்திரசிங்கம்
(அரச நில அளவையாளர்,
குருநாகல்)

சிரேஷ்ட புத்திரி
சுலோசனதேவி

அவர்களுக்கும்

திருவருள் நலத்தால் மணமகளில்லத்தில் நிகழும் திருமண வைபவத்தில் கலந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு இனபந்துக்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவைக் களிப்புடன் நாடும்

திரு. திருமதி பொ. சாமிநாதர்
'முருகு'
மாரீசன் பதி
இளவாலை.

திரு. திருமதி செ. தியாகராசா
இராசா ஒழுங்கை
பண்ணாகம் தெற்கு
சுளிபுரம் 31

## நாகம்ஸ்

[சுன்னாகம்]
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப 2-30
ஜெமினி-சரோஜாதேவி
**பணமா பாசமா**

## வெஸ்லி

[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
அசோகன்
வசந்தா
**கார்த்திகை தீபம்**

## ஸ்ரீ கிருஷ்ணா

[பண்டத்தரிப்பு]
தினசரி 6-30, இரவு 9-30
ஜெய்சங்கர்-சுந்தரராஜன்
**நம்ம குழந்தைகள்**

## REGAL Jaffna

Daily 4-45, 7-00, 9-30pm
Robert Shaw,
Anne Bancroff
in
**YOUNG WINSTON**

## ராஜா

(யாழ்ப்பாணம்)
காலை 10-30, 2-30
ஜெய்சங்கர் - பாரதி
தேங்காய் சீனிவாசன்
நடித்த
**காதல் பறவை**

மாலை 6-30, இரவு 9-45
Roy De Silva, H R Jothipala, Kanthileka in
**SUNETHRA** (சிங்களம்)

## ஸ்ரீதர் சினிமா

(யாழ்ப்பாணம்)
கொழும்பிலே
25 வாரத்துக்கு மேல் ஓடிய
சித்திரம்
தினசரி 4 காட்சிகள்
**த பொடி THE BODY**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## ராணி சினிமா

[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஏ.வி.எம். ராஜன்
மேஜர் சுந்தரராஜன்
நடித்த
**அன்புச் சகோதரர்கள்**
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய சித்திரம்

## வின்ஸர்

4-வது வாரம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜீ. ஆர், ஜெயலலிதா நடித்த
**அன்னமிட்டகை**


கடைசி சில தினங்கள் மட்டும்

## றியோ

(யாழ் நகரமண்டபம்)
தினசரி 5 காட்சிகள்
**CHRIST OF THE OCEAN**
**சமுத்திரத்தின் யேசு பெருமான்**
இடவசதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
(School's contact Management for concession)

## வெலிங்டன்

(யாழ்நகர்)
தினசரி
பி. ப. 2-30 மாலை 6-30
இரவு 9-30, சனி, ஞாயிறு
காலை 10-30



**ராமன் தேடிய சீதை**
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் - அசோகன் - நாகேஷ் - மனோரமா
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

## லிடோ

[யாழ்ப்பாணம்]
தினசரி
காலை 10-00, பி. ப. 2-00,
மாலை 6-00, இரவு 9-00
முத்துராமன் - ஜெயலலிதா
**சூரியகாந்தி**

## சாந்தி

(சங்கானை)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி-கே. ஆர். விஜயா
நடித்த
கோபாலகிருஷ்ணனின்
**சின்னஞ்சிறு உலகம்**

... ஞாயிறு மு. ப. 10-30
CHITTO LAND

## செய்தித் துளிகள்

வவுனியா

அரச மரக்கூட்டுத்தாபனத்தினர் கருங்காலி மர... வெளிநாடுகளுக்கு ஏ... செய்வதில் தீவிரக... செலுத்திவருகிறார்கள். ... நாட்டுச் செலவாணி ... மூலம் அதிக அளவில் ... குமாம்.

### கைது

கொழும்பு

கொழும்பில் நடை... வியாபாரம் ரதத்துச் ... பட்டுள்ள போதிலும் ... மீறி நடைபாதை வர்... செய்த சுமார் 200 அ... களைப் பொலிசார் ... செய்து வழக்குத் ... செய்துள்ளனர்.

### கரடியுடன் போராடிய வாலிபர்

அம்பாறை

கரடியுடன் போ... வாலிபர் ஒருவர் ஆ... தாளததிலில் வீழ்ந்து ... சையான பொழுது ... தாய் வீட்டிற்கு ஓடிச் ... குரைத்தபடியே ச... கொடுத்து உறவி... அழைத்துச்சென்று அ... பரைக் காப்பாற்றியுள்... வம் இப்பகுதியில் அ... மையில் நிகழ்ந்துள்ள...

### மன்னிப்பு கோரினர்

களனியா

வித்தியோதயப் ப... சழக விரிவுரையாளர்... வரைத தாக்கிய ... மாணவர்கள் மன்... கோரியதால் ... களுக்கு மீண்டும் ... திக்கப்பட்டுள்ள. பே... சலுகைகள் சிலவற்றி... தற்காலிகமாக ரத்துச் ... யப்பட்டுள்ளனர்.

### எச்சரிக்கை

கண்...

தலைமயிரை அதிகம் ... தது பெல்பொட்டம் ... யுடன் தம்மை பெரி... தவர்கள் என்றுகூறிக் ... ளும் வாலிபர் கோஷ்... பகலில் தோட்டம்வி... வில் திட்டமிட்ட ... களையும் கொலைகளை... டிப்பகுதியில் செய்து ... தாக பொலிசார் மக்... சரித்துள்ளனர்.

### வடிகாலில் சடலம்

கொழும்பு

கொழும்புப் பகுதி... சேர்ந்த அத்துறுகிரி... கால்வாய் ஒன்றிலிருந்... டெடுக்கப்பட்ட ... ஒன்றின் மீது விசார... திய பொலிசார் ... தின் மீது ஒருவரை ... செய்தபோது தனக்... வேண்டிய 40 சதம்... காக வடிகால்வ... அமிழ்த்திக் கொலை ... தாகத்தெரிவித்தாரா...

### சாதனை

திரும...

பாதுகாப்பான ... அலகுகளை உள்... உற்பத்தி ... சாதனையை ஏற்ப... ளது, திருமலையிலு... வனமொன்று. ... அலகுகளை உற்பத்... இந்த நிறுவனத்தி... வேலை செய்வதாக... பொருட்கள் முழு... இலங்கையினுடை... கூறப்படுகிறது.

### சுற்று நிருபம்

கொ...

கட்டுப்பாட்டு ... உடுபுடவையும், ... செலவில் வீடும் ... யர்களுக்குவிறை... வுள்ளது. இத... பாடுகளைச் செ... அரச திணைக்... சுற்றுநிருபமொ... வைக்கப்பட்டு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலான் குன்று. படை விலகல் : கீஸிங்கரின் கருத்துக்களை சிரியா ஏற்றது

டெல்அவிவ், மே, 29

கோலான் மேட்டுப் பிரதேசத்தில் படைவிலகல்தொடர்பாக சிரியஅதிபர் அல்ஆஸாத்துக்கும் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் கீஸிங்கருக்கும் இடையே மேலும் சில கொள்கைகளில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக சிரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

டாக்டர் கீஸிங்கர் தமது தாயகப் பயணத்தை பிற்போட்டுவிட்டு படைவிலகல் ஒப்பந்தம் ஒன்றுக்கான இறுதி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

டமாஸ்கஸில் ரஷ்ய வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோவுடனும் பேச்சுக்கள் நடத்திய டாக்டர் கீஸிங்கர் டெல்அவிவ் பயணமானார்.

இதேவேளையில், படைவிலகல் தொடர்பான சிரிய கருத்துக்களை இஸ்ரேல் மந்திரிசபை அவசரமாகக் கூடி இன்று ஆராய்கிறது.

இது இவ்வாறிருக்க, பாலஸ்தீன இயக்கத்தலைவர் அரபாத் குரோமிகோவுடனும், சிரிய அதிபருடனும் தனித்தனியே பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

## பிரான்ஸின் புதிய பிரதமர்

பாரிஸ், மே 29

பிரான்சின் புதிய பிரதமராக திரு. ஜாக் ஷிராக் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரான்சின் பிரதமர்களுள் இவரே வயதில் இளையவராவார். முன்னாள் விவசாய அமைச்சரான இவருக்கு வயது 41.

திரு. வெலரி டெஸ்டாய்ங் நேற்று ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின்னர் புதிய பிரதமரின் பெயரை அறிவித்தார்.

## பாகிஸ்தானுக்கு நன்றி

கராச்சி, மே 29

'80,000 தொன் அரிசியை பாகிஸ்தானிலிருந்து இவ்வாண்டு இலங்கை இறக்குமதி செய்கிறது. இவ்விதமான கஷ்ட நேரத்தில் பாகிஸ்தான் செய்யும் உதவியை நாம் மறக்கமாட்டோம்.'

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த இலங்கைத் தூதுக்குழுவின் தலைவரான டாக்டர் ஜே. பி. ஹெல்ஹமா கூறினார்.

கராச்சி வர்த்தகக் கைத்தொழில் சேம்பரில் பேசுகையில் டாக்டர் ஹெல்ஹமா சொன்னார்.

## மாணவர் கலவரம்

புதுடில்லி, மே. 29

ஆர்ப்பாட்டத்தில்இடம்பெற்ற மாணவர் கலவரத்தையடுத்து 150 மாணவர்களைப் பொலிசார் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர்.

வீதிவழியே ஆர்ப்பாட்டம் செய்துவந்த மாணவர்கள் சில கடைகளைத் தாக்கியதோடு பிரயாணிகள் நிறைந்திருந்த பஸ் ஒன்றுக்கு தீ வைக்கவும் முயற்சி செய்தனர். இம்முயற்சி இறுதி நேரத்தில் தவிர்க்கப்பட்டது.

## "திருமுறைகளைப் பண்முறைப்படி ஓதவேண்டும்"

யாழ்ப்பாணம், வியாழன்

"திருமுறைகளை அந்தந்தக் கட்டளைகளுக்கு அமைவாகப் பண்ணுக்குஇசையப்படித்தல் வேண்டும். பழையமரபுகளைப் பேணி திருமுறைகளை ஓதும் வழக்கத்தை வளர்க்கவேண்டி கல்விப்பகுதியோடு இணைந்த வடஇலங்கைச் சங்கீத சபை நடவடிக்கை எடுப்பதற்கு முன்னோடியாகவே இந்தப் பண் ஆராய்ச்சிச்சபை கூடியுள்ளது. கல்வி அதிபதி இச்சபைக்குப் பூரண ஆதரவு நல்குவார்."

வடஇலங்கைச் சங்கீதசபையின் ஆதரவில் கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் சென்ற ஞாயிறு மாலை நடைபெற்ற கருத்தரங்குக்குத் தலைமை வகித்துப் பேசிய சங்க உபதலைவர் வைத்திய கலாநிதி திரு. க. சிவஞானரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அனுப்பிவைத்த செய்தியில், "பண்ணைப்பரிணமிக்கும் பாட்டுக்கு இராகம் அமைவது திருமுறை நெறி. இராகத்துக்குப் பாட்டு அமைவது கர்நாடகநெறி. உயிருக்கு ஏற்ற உடல் அமைவது பண்ணெறி. உடலுக்குஉயிர்தேடுவது கர்நாடகநெறி. இராகம் கர்நாடகப் போக்கில் பண்ணைக் குலுக்கியடிக்குமானால் அருக்சனைத்தட்டைக் கையில் வைத்துக்கொண்டு கூத்தாடுவதுபோல இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை பேசுகையில் "பண்ஓசை மனதைக்குளிர்விப்பது. திருமுறைகளைப் பிழையின்றியும், பண்ணுக்கிசையவும் படிப்பதற்கு நடைபேசுங்களை நன்கு அறிந்திருத்தல் வேண்டும்" என்றார்.

சங்கீதபூஷணங்களான பி. சந்திரசேகரம், எஸ். விநாசித்தம்பி, வி. ரி. வி. சுப்பிரமணியம் ஞானபண்டித வித்தியாசாலை அதிபர் எஸ். தர்மலிங்கம், ஆசிரியர் திரு. அ. பஞ்சாட்சரம் உட்படப் பலர் உரையாற்றினர். புதியசபைக்குப் 'பண்ணிசை மன்றம்' என்ற பெயர் சூட்டுவதென முடிவானது. (அ)

### அதிகஅரிசி கொள்வனவு

புதுடில்லி, மே. 29

இந்தியாவில் இவ்வருடத்தில் என்றுமில்லாதவாறு 40 லட்சம் தொன்னுக்கும் அதிகமான அரிசியை கொள்வனவு செய்யமுடியும் என்று அரசு நம்புவதாக இந்திய உணவு அமைச்சர் ஜனப் பக்ருதீன் அலிஅஹமத கூறினார்.

இதுவரை 31 லட்சம் தொன் அரிசி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.


## தேவை

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு விற்பனவு காரன் தரம் III-ம், ஒருகாவல்காரனும் தேவை. விண்ணப்பம் அனுப்ப விரும்புவோர் 15-6-74 முன் கிடைக்கக்கூடியதாக பொது முகாமையாளருக்கு அனுப்பிவைக்கவும். மற்றைய விளம்பரங்களைமேற்படி சங்கக் கந்தோரிலும் அதன் கிளைகளிலும் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்.
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.

30

## பதவி வெற்றிடம்

தற்காலிக நாளாந்த சம்பளத்தில் பொது முகாமையாளர் தேவை.

வயது 25 தொடக்கம் 40 வரை வயதிற்குட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

ஆங்கிலத்தில் S.S.C. அல்லது க.பொ.த. (சாதாரணம்) அத்துடன் குண்டசாலையில் பயிற்றப்பட்டவர்/கணக்குப்பதிவியல்

பிணைப்பணம்: ரூபா 1,500/-

10-6-74க்கு முன் பதிவுத்தபாலில் விண்ணப்பிக்கவும்.

கௌரவ காரியதரிசி.

வட இலங்கை கூட்டுறவு
பா. உ. சங்கம்.
67/1, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.


## இன்றைய பலன்

(30.5.74)
வைகாசி மீ 16

**மேஷம்:** விருந்துபசாரங்களின் மூலம் பணம் பெருமளவில் செலவாகும். இதன் மூலம் கடன் தொல்லைகளும் அதிகரிக்கலாம்.

**ரிஷபம்:** எதிர்காலம்பிரகாசமடைய இன்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். முன்னாள் மேலதிகாரி யொருவர் உங்கள் வெற்றிக்குத் துணைநிற்பர்.

**மிதுனம்:** பெண்களாயின் மனக்கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளவும். சண்காணிப்பு பலமாக விருக்கும்.

**கடகம்:** தொழில்துறையில் அதிருப்தி நிலவும். இனத்தவர்கள் மத்தியில் அபிப்பிராய பேதங்கள் தோன்றி மறையும்.

**சிம்மம்:** முதியவர் ஒருவரின் முணுமுணுப்பு குடும்பத்தில் குழைச்சலை அதிகரிக்கும் அமைதி விருப்பத்தக்கது.

**கன்னி:** குடும்ப வாழ்க்கையில் சமரசம் நிலவும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் பெருமதிப்புக் கொடுப்பர்.

**துலாம்:** ஆனந்தமும் ஆத்திரமும் கலந்த நிலையில் அவதிப்படுவீர்கள் தெய்வ நம்பிக்கை வேண்டும்.

**விருச்சிகம்:** சூதாட்டத்தின் மூலம் பெருந்தொகையை இழக்க நேரிடலாம். நண்பர்களுடனும் பகைத்துக் கொள்வீர்கள்.

**தனுசு:** புதிய எண்ணங்கள் தலைதூக்கும். சுற்றுடலில் மதிப்பு உயருவதற்கு இடமுண்டு. எதிலும் நிதானம் வேண்டும்.

**மகரம்:** உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவுபார்ப்பர். பிரயாணத்தின் போது பொருள் நழுவக் கூடும்.

**கும்பம்:** இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும். இல்லம் பல்கலைக்கழகமாக மாறும்.

**மீனம்:** எதிர் பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும். அவசர முடிவு ஆபத்தில்சிக்க வைக்கலாம்.

ஜோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# இஸ்ரேல் புதிய மந்திரிசபை இபான், தயான் வெளியே!

டெல் அவிவ், மே 29

இஸ்ரேல் கூட்டரசாங்கத்தின் புதிய மந்திரிகளின் பெயரைப் பிரதமர் ராபின் அறிவித்துள்ளார்.

புதிய மந்திரிசபையில் முன்னாள் வெளிநாட்டு மந்திரி திரு. அபா இபானுக்குப் பதிலாக திரு. இகால் அலான் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் உதவிப் பிரதமராகவும் பதவி வகிப்பார்.

புதிய மந்திரிசபையில் தாம் பதவி வகிக்கப்போவதில்லை என்று பாதுகாப்பு மந்திரி மோஷே தயான் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

புதிய மந்திரிசபையில் ஒரு பெண்ணும் இடம் பெற்றிருக்கிறார்.

# வேலை நிறுத்தம் முடிந்தும் பிரச்னைகள் குறையவில்லை!

புதுடில்லி, மே 29

இந்திய ரயில்வே ஊழியர் வேலை நிறுத்தம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் வன்முறைச் செயல்கள் நாசவேலைகளில் ஈடுபட்டவர்கள் தவிர்ந்த சகலரையும் விடுதலை செய்யுமாறு மத்திய அரசு சகல மாநில அரசுகளுக்கும் உத்தரவிட்டுள்ளது.

வன்முறை, நாசவேலை ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் மீண்டும் வேலைக்குச் செல்லஅனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்திய உதவி ரயில்வே மந்திரி முகமட்குரேஷி தெரிவித்தார்.

நேற்றுக்காலை 6 மணிமுதல் ஊழியர்கள் வேலைக்குத் திரும்புக் கொண்டிருக்கும் இவ்வேளையில் ரயில்சேவை சகஜ நிலைக்குத் திரும்புவதற்கு இன்னும் ஒரு மாதகாலம் வரை செல்லும்" என்றும் அவர் கூறினார்.

இதேசமயம் நேற்று சிழக்கு பிராந்தியத்தில் வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கும் செய்யாதவர்களுக்கும் இடையே இடம் பெற்ற மோதலில் ஒரு ஸ்டேஷன் மாஸ்டர் உட்பட 18 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## 114 மூடை கடத்தல் நெல் பிடிபட்டது

வண்ணார்பண்ணை, புதன்

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உத்தரவுப்பத்திரமின்றி சட்டவிரோதமாக நெல்ஏற்றிச்சென்ற லொறியையும் அதனுள் மறைத்துவைக்கப்பட்டிருந்த 114 மூடை நெல்லையும் ஆனையிறவுத் தடைமுகாமில் நின்ற சிவில் உத்தியோகத்தர்கள்தடுத்து நெல்லை நெற்சந்தைப்படுத்தும் சபையிடம் ஒப்படைத்தனர்.

சிவில் உத்தியோகத்தர்கள் திரு வி. சிதானந்தன், திரு. ரி. கருணைநாதன் ஆகியோர் இதைக்கைப்பற்றினர். இது சம்பந்தமான விசாரணையில் இந்த லொறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்ததல்ல என்று தெரியவந்தது. (அ)

## உற்சவம்

சரவணை, புதன்

நாரந்தனை-சரவணை ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. அடுத்த மாதம் 3ந் திகதி நடைபெறும் பெரிய சப்பரத் திருவிழாவையடுத்து மறுதினம் தேர்த்திருவிழா நடைபெறும்.


## அறிவித்தல்

நெசவாளர்களே நீங்கள் தயாரிக்கும் நெசவுப் பொருட்கள் அனைத்தையும் மொத்தமாகவோ சில்லறையாகவோ பெறுமதியான விலைகளில் எம்மிடம் விற்பனை செய்யலாம்.

எஸ். ஆர். எஸ். ஜவுளிமாளிகை
எஸ். ஆர். செல்லத்துரை
216, கே. கே. எஸ். ரோட்—யாழ்ப்பாணம்.
போன்: 296

பால்பண்ணைக்காரர்களுக்கும்
கால்நடைகளின் சொந்தக்காரர்களுக்கும்
நல்லதோர் செய்தி
விட்டாலக்
VITALAC

போஷாக்கு சத்து நிறைந்த இந்த கால்நடை உணவாகிய விட்டாலக் தென்னந்துருவலிலிருந்து தயாரிக்கப்பட்டு தேங்காய்ப்பிண்ணாக்கிலும் பார்க்க மிகவும் மலிவான விலைகளில் விற்பனையாகிறது.

விட்டாலக் தயாரிப்புகள் தேங்காய்ப் பிண்ணாக்கைப் போல சிறந்த பயனை அளிக்கின்றன என்பதை ஒருமுறை பரீட்சித்துப் பார்த்தால் நீங்களே தெரிந்து கொள்வீர்கள்

உங்கள் வியாபாரியிடம் கேட்டுப் பாருங்கள் அல்லது நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஆர். எம். பி. & சன்ஸ்
லிமிட்.,
மீனும்பிகை ஒயில் மில்ஸ்,
121, பியகம ரோட் களனி,
தொலைபேசி: 075 — 321
075 — 322


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வழி தெரியாதவனை வழி காட்டியாகக் கொள்வதும் திருடனை நண்பனாகக் கொள்வதும் தற்கொலை முயற்சிக்குச் சமமாகும். —ஜான்பரோஸ்

# ஈழநாடு

(30—5—74)

## தமிழ் நாட்டின் அரசியல்

'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்று நெஞ்சை நிமிர்த்திப் பாடிய கவிஞன் கூட இன்று தமிழ்நாட்டின் அசிங்கமான அரசியல் நிலை கண்டு வெட்கத்தாலும் வேதனையாலும் கூனிக் குறுகிப்போவான். இன்று அந்தக் கவிஞன் உயிரோடிருந்தால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு செத்தாலும் செத்திருப்பானென்றே சொல்லவேண்டும்.

'தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கோர் குணமுண்டு' என்று நாமக்கல்லார் பாடியபோது தமிழனுக்கென ஒருநாடு உண்டு என்று அவர் பாடவில்லையே என்று குறை கூறிய அமரர் அறிஞர் அண்ணா, தமிழர் தலைவராகி ஆட்சிபீடத்தில் அமர்ந்ததும் சென்னை மாநிலத்தைத் 'தமிழ்நாடு' என்று மாற்றிப் பெருமை கொண்டார். இதைக் கேட்டு உலகில் பரந்து வாழும் தமிழ்மக்கள் அனைவருமே பூரிப்படைந்தனர். தமிழருக்கும் ஒருநாடு இருக்கிறதென மகிழ்ச்சியடைந்தனர்.

இன்றோ தமிழ் நாட்டில் அரசியல் தரங்கெட்டுத் தறிகெட்டு நிலைகெட்டு நிற்கும் கேவல நிலைகண்டு 'தமிழ்நாடு', என்றதான் அண்ணா பெயர் வைத்தாரோ என்று வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் கவலையடைவதில் நியாயமுண்டு.

அண்ணாவின்பின் நேற்றுவரை ஒன்றாக இருந்தவர்கள் இன்று ஒருவரையொருவர் தனிப்பட்ட முறையில் கீழ்த்தரமாக பொதுமேடைகளில் ஏசுவதும் அவர்களின் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் மட்டுமல்லாது இலங்கையுட்படதமிழர்வாழும் நாடுகளிலுள்ள வேறு சில பத்திரிகைகள் பிரதிபண்ணிப் பிரசுரிப்பதும் தமிழர்களைத் தலைகுனியவே வழிவகுக்கின்றன.

இந்தியா சுதந்திரம்கோரிப் போராடியபோது அவர்களுக்கு ஆளும் ''திறமையில்லை'' என்று அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் கூறினராம்.

அந்த வாசகம் இந்திய நாட்டைப் பொறுத்தவரை பொய்த்துப்போனாலும் தமிழ்நாடு அதை மெய்ப்பித்துவிடும்போலிருக்கிறதே!

உலகம் முழுவதிலும் பரந்துவாழும் தமிழ்மக்களுக்கு வழிகாட்டவேண்டிய தமிழ்நாட்டின் தலைவர்கள் தமிழர்களைத் தலைகுனியவைக்க வேண்டுமா?

உலகின் முதல் மனிதனே தமிழன்தான் என்றும் உலகுக்கு நாகரிகத்தைக் கற்பித்தவனே தமிழன்தான் என்றும் வெளிநாட்டு அறிஞர்கள் ஆராய்ச்சிசெய்து அறிவிக்கும் இச்சமயத்தில் தமிழன்தான் இன்று மிகக் கேடுகெட்ட கேவலமான மனிதன் என்று தமிழ்நாட்டுத் தலைவர்கள் பறைசாற்றவேண்டுமா?

இதுவா தமிழன் பண்பு?

கட்சிப் பிரச்னைகள், உள்நாட்டுப் பிரச்னைகள், பதவி ஆசை, அதிகார மோகம் எல்லாவற்றையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு உலகிலுள்ள தமிழர்கள் அனைவரும் தலைநிமிர்ந்து நிற்கும்வகையில் தமிழ்நாட்டின் தலைவர்கள் பண்போடு நடந்துகொள்ள முடியாதா?

### இன்றைய இசை விழாவில்

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூரிலுள்ள யாழ். திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றுவரும் இளங்கலைஞர் மன்றத்தின் ஏழாவது நான் இசை விழாவான இன்றைய நிகழ்ச்சிகள் யாழ். நீதவான் திரு கே. பாலகிருஷ்ணர் தலைமையில் மாலை4 மணிக்கு ஆரம்பமாகும்.

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வியா.

உரும்பிராய் கற்பகவிநாயகர் ஆலய சங்காபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது. தொடர்ந்து விசேட உற்சவமும் இடம்பெறும்.

0 0 0

யாழ்ப்பாணம், வியா:

நயினாதிவு தில்லைவெளி பிடாரி அம்பாள் அஷ்டோத்திர மகாசங்காபிஷேகம் எதிர்வரும் 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. (அ)

### தரக்குறைவான பொருட்களைத் திருப்பிக் கொடுக்கலாம்

கொழும்பு, புதன்

தரக்குறைவான அல்லது பழுதடைந்த பொருட்களை வியாபாரிகள் விற்பனைசெய்யும் பட்சத்தில் அப்பொருட்களை அந்த வியாபாரிகளிடம் திரும்பவும் கொடுத்து அவற்றுக்கான பணத்தைத் திரும்பப் பெறக்கூடிய வகையில் சட்டம் ஒன்று இயற்றப் படவிருக்கிறது.

இதற்கான திட்டம் ஒன்று உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினவின் பொறுப்பின் கீழ் விலைக்கட்டுப்பாட்டு இலாகாவினால் தயாரிக்கப்படவிருக்கிறது.

### இலங்கையிட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்

வருடா வருடம் இலங்கைக்கு 80 ஆயிரம் தொன் அரிசியையும், கருவாட்டையும் பாகிஸ்தான் தந்துவருகிறது என்றும் அவர் கூறினர்.

### மிளகாய்ச் செய்கையில் இவர்கள் ஊக்கம்

முல்லைத்தீவு, புதன்

புதுக்குடியிருப்புக் காரியாதிகாரி திரு. செ. அமிர்தலிங்கம், திட்ட உதவியாளர் திரு. சி. குணசிங்கம் ஆகியோரின் முயற்சியினால் வவுனியா மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புதுக்குடியிருப்பு கயல்வேலி என்னுமிடத்தில் 25 ஏக்கர் நிலத்தில் மிளகாய்ச் செய்கையைப் படித்த வாலிபர்கள் மேற்கொண்டுள்ளனர். காரியாதிகாரியும், திட்ட உதவியாளரும் இத்திட்டத்தைக் கவனித்து வருகின்றனர்.

சம்மாங்குளத்தில்

புதுக்குடியிருப்புக் காரியாதிகாரி பிரிவைச்சேர்ந்த ஒட்டுசுட்டான் சம்மாங்குளத்திலும் 25 ஏக்கர் நிலத்தில் மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் படித்த வாலிபர்களுக்கு மிளகாய்ச் செய்கைக்கான காணி வழங்கப்பட்டுள்ளது. மிகவிரைவில் ஆரம்பமாகவிருக்கும் இத்திட்டத்துக்கான சகல நடவடிக்கைகளையும் காரியாதிகாரியும் திட்ட உதவியாளரும் செய்துவருகின்றனர். (அ)

### சைவசித்தாந்த கலாசாலை

மாவிட்டபுரம், புதன்

அகில இலங்கை வைதிக சைவப் பேரவையின் ஆதரவில் அடுத்த மாதம் 21ம் திகதி வேதாகம சைவசித்தாந்த கலாசாலை ஒன்று மாவிட்டபுரத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. பேரவையின் கூட்டம் மாவிட்டபுரத்தில் பிரம்மஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றசமயம், கலாசாலையை பிரம்மஸ்ரீ சி. நாராயணசர்மா தலைமையில் ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டது. (அ)

ஆசிரியருக்குகடிதம்

### முதலில் வீட்டுச்சமயம்

இலங்கை வாழும் இந்துக்கள் இராமகிருஷ்ணமிஷன் இந்நாட்டுக்குவருமுன் சைவர்களாய், சைவசித்தாந்திகளாய் இருந்தார்கள். இராமகிருஷ்ணமிஷன் வந்து வேறுபாடுகளை அவர்களுக்குள் உண்டாக்கிவிட்டது. இந்துக்கள் தொன்று தொட்டு, உலகம் தொடங்கிய காலம் தொட்டு, சைவர்களாய், சைவசித்தாந்திகளாய் இருந்தார்கள். அந்தப் பரம்பரையில் வந்த சமயகுரவர் ஆகிய நால்வர் சைவத்தை பல இன்னல்களுக்கிடையில பாதுகாத்துவந்தார்கள்.

அப்படியான சமயத்தைத்தான் எங்களுடைய சிறுர்களுக்கு சமயபாடமாக வைத்து அவர்களுடைய சைவப்பற்றை வளர்க்கவேண்டும். ஆனால் மாயாவாதக் கொள்கையைக் கடைப்பிடித்த இராமகிருஷ்ணர் சிவியத்தை எங்களுடைய சிறுர்களுக்கு அவர்கள் சைவசித்தாந்தத்தை முற்றாக அறியாமல் இருக்கும் பொழுது கற்பித்தால் அவர்களுடைய சைவ நெறிமுறைகளில் குழப்பம் ஏற்படக்கூடிய ஆபத்து இருக்கின்றது.

ஆனபடியால் எங்களுடைய சிறுர்களுக்கு சமயம் படிப்பிக்க தொடங்கும் பொழுது சைவசமயத்தையே கற்பிக்க வேண்டும். அப்படிக்கற்பிக்க முடியுமாயின் அவர்கள் தங்களுடைய வீட்டுச்சமயத்தை நன்றாக அறிந்த பிற்பாடு மற்றசமயங்களின் தராதரத்தை அறியக்கூடிய பக்குவம்வரும். இம்முறையை பின்பற்றினால் தான் தற்பொழுது சுருங்கி வரும் சித்தாந்த உலகம் விரிவடையும்.

[illegible]




பூசைகள் செய்வார் கண்டு
பொலிவுற மாட்டேன், மேலும்
ஏசுவோர் இகழ்வோர் கண்டு
இருதயம் உடைய மாட்டேன்,
ஏசுவோர் பூசை செய்வோர்
என்னையே நினைப்ப தென்னி
நேசமே அவர்கள் மேலே
நிச்சயங் கொள்ளு வேனே.

எனக்குப் பூசைகள் புரிபவரைக்கண்டு, நான் மனம் மகிழமாட்டேன். என்னை ஏசுபவர்களைக் கண்டு மனம் நோகமாட்டேன். ஏசுபவர்களாயினும் சரி, பூசிப்பவர்களாயினும் சரி, என்னையே நினைக்கின்றார்களாகையால், அவர்கள் மேலே நான் நிச்சயமாக அன்பே கொள்ளுவேன்.

### பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பினர்

ஆனைக்கோட்டை, புதன்

கோப்பாய் பொலிஸ் நிலயத்திலுள்ள மலசல கூடத்துக்குள் நுழைந்த சந்தேகநபர் மாயமாக மறைந்துவிட்டாராம். வாளி வைக்கப்படும் இடைவெளி யூடாக அவர் தப்பிச்சென்ற விஷயம் பின்னர்தான் பொலிசாருக்குத் தெரியவந்தது.

மாடுகளுடன் இரவு நேரத்தில் வீதியால் சென்றுகொண்டிருந்த இருவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்த கோப்பாய் பொலிசார் பொலிஸ் நிலயத்துக்கு கொண்டு சென்றனர். அங்குதான் ஒருவர் இப்படியான தந்திரத்தைக் கையாண்டு தப்பினாராம்.

இது சம்பந்தமாக கோப்பாய் பொலிஸ் நிலய பொறுப்பதிகாரி திரு. ஆர். எம். எம். விஜயசுந்தரா புலன் விசாரணை செய்துவருகிறார்.

### பொது மக்களின் ஆலோசனை கோரிக்கை

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை மாட்டிறைச்சிக் கடையில் பசுமாடும் அறுத்து விற்பனை செய்வது சம்பந்தமாகப் பொதுமக்களிடம் ஆலோசனை கோரியுள்ளார், காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம்.

காங்கேசன்துறை மாட்டிறைச்சிக் கடைக்காரர் தமது தொழிலை நடத்த போதிய காளைமாடு கிடைக்காததால் பசுமாடுகளையும் அறுத்து விற்பனை செய்ய அனுமதி தருமாறு கேட்டுள்ளதாகவும், ஆகவே இது குறித்து பொதுமக்களினது அபிப்பிராயங்களைக் கேட்டு அதன்படியே நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளதால் பொதுமக்கள் இதுபற்றிய அபிப்பிராயங்களைத் தமக்கு அனுப்பிவைக்குமாறும் ப. ச. தலைவர் கோரியுள்ளார். (அ)

### எதிரிக்குத் தூக்கு!

வவுனியா, புதன்

புதூர்க் கொலைவழக்கின் எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஜூரிசபையினர் 6-1 ஆசுபிரித்துமுடிவைத் தெரிவித்ததைத் தொடர்ந்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 72-ம் ஆண்டு செப்டம்பர் 8-ந் தேதி இஸ்மெயில் லெப்பை சேகு அப்துல்காதர் என்பவரைக் கொலைசெய்ததாகவும் 100 ரூபா ரொக்கம் கைக்கடிகாரம் ஆகியவற்றைக் கொள்ளையடித்ததற்கும், ஆதம்பாவா காசிம் என்பவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

நீதவான் தீர்ப்பளிக்கையில் கொலைக்குற்றத்திற்கு மரணதண்டனையும், கொள்ளைக்குற்றத்திற்கு 7 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்தார்.

### ஐக்கிய ஆசிரியர் சங்கக்கிளை

உடுப்பிட்டி, புதன்

''இன்று இலங்கையில் ஆசிரிய சங்கங்கள் அடைந்துள்ள வளர்ச்சி அபரிமிதமானது. ஆசிரியசங்கங்கள் வளம்பெற்றுள்ளதால் ஆசிரியர்களின் நலன்கள் பாதுசாக்கப்பட்டு வருகின்றன' என்று ஸ்ரீலங்கா ஐக்கிய ஆசிரியர் சங்கத்தின் வடபிராந்தியக் கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப்பேசுகையில் தாய்ச் சங்கத்தலைவர் திரு. எட்வேட் வீரசேகாரா குறிப்பிட்டார்.

இவ்வாசிரிய சங்கத்தின் வட பிராந்தியக் கிளைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியர் திரு. பி. சின்னத்தம்பி பேசும் பொழுது ''ஆசிரியர்களிடையே பல்வேறு சங்கங்கள் தோன்றிப் பிரிவினையை உண்டாக்கக் கூடாது ஒன்ற ஒரே நோக்கத்துடனேயே ஸ்ரீலங்கா ஐக்கிய ஆசிரியர் சங்கக்கிளையை வட பகுதியில் ஆரம்பித்துள்ளோம் இச்சங்கம் அரசாங்கத்தின் முற்போக்குத் திட்டங்களையும், கொள்கைகளையும் என்றும் ஆதரிக்கும்' என்றார். (அ)

### சோவியத்தில் புதிய இலங்கைத் தூதுவர்

கொழும்பு, புதன்

சோவியத் யூனியனில் இலங்கையின புதிய தூதுவராக திரு. சி. ஈ. எஸ். வீரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

### சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் 5-ம் வட்டார மக்கள் குழுத்தலைவர் திரு. செ. செபஸ்தியாம்பிள்ளை யாழ். உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் சமாதான நீதவானகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார், திரு. செபஸ்தியாம்பிள்ளை அரசாங்க குடிசைத் தொழில் இலாகாவில் முன்பு ஆசிரியராகப் பணியாற்றியவர். (அ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு மே மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box No 49, Jaffna Telegrams "Eelanaadu" Telephone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org